DEPOSITION OF WITNESS

IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,
TENKASI.

**MCOP.No.327/2022**

| | | |
|---|---|---|
| Name | : | நாராயணன் **Pw3** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 28th day of February 2024.

**முதல் விசாரணை**

நான் நீதிமன்றத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன். நான் பண்பொழிலில் குடியிருந்து வருகிறேன். டீக்கடை நடத்தி வருகிறேன். இறந்தவர் ஓட்டிச் சென்ற வாகனம் என்னுடைய வாகனம் ஆகும். இறந்த முருகசாமி என்னுடைய டீக்கடையில் எல்லா வேலைகளையும் செய்வார். முருகசாமியுடன் என் டீக்கடையில் 2 நபர்கள் வேலை பார்த்தார்கள். முருகசாமி நல்ல உடல் ஆரோக்கியத்துடன் இருந்தார். அவருக்கு ஒரு நாள் 900 ரூபாய் கூலி கொடுப்பேன். சில சமயம் அதிகமாகவும் கொடுப்பேன். வேலை சிறப்பாக செய்வார். மாதத்திற்கு 1, 2 நாட்கள் விடுப்பு எடுத்துக்கொள்வார். டீக்கடை நடத்துவதற்கு உணவுப் பாதுகாப்புத்துறையில் இருந்து எனக்கு வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழின் ஒளிப்பட நகல் அசலுடன் ஒப்பிடப்பட்டது ம.சா.ஆ.10 ஆகும். பண்பொழி பேரூராட்சியில் டீக்கடை நட,த்துவதற்கு எனக்கு வழங்கிய உரிமத்தின் ஒளிப்பட நகல் அசலுடன் ஒப்பிடப்பட்டது ம.சா.ஆ.11 ஆகும். பண்பொழி பேரூராட்சியில் இருந்து தொழில் நடத்துவதற்கு வழங்கிய தொழில் வரி ரசீதின் ஒளிப்பட நகல் அசலுடன்

ஒப்பிடப்பட்டது ம.சா.ஆ.12 ஆகும். இறந்தவர் என்னுடைய உறவினர் அல்ல.

**<u>5ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

இந்த விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. விபத்து சம்பந்தமாக காவல் நிலையத்திற்கு யார் என்ன சொல்லி தகவல் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. விபத்து சமயத்தில் முருகசாமி ஓட்டிச் சென்ற டிஎன் 76 ஜெ 7932 பதிவெண் கொண்ட வாகனம் என்னுடைய வாகனமாகும். அந்த வாகனத்திற்கு முருகசாமி உரிமையாளர் அல்ல. அன்றைய தினம் என்னுடைய வண்டியை முருகசாமி இரவலாகத்தான் வாங்கிச் சென்றார். முருகசாமி என்னுடைய டீக்கடையில் வேலை பார்த்தார் என்பதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவருக்கு 900 ரூபாயும், சில சமயம் 1000 ரூபாயும் கொடுத்தேன் என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கேள்விப்பட்ட வரையில் இந்த விபத்திற்கு முருகசாமி காரணமல்ல. விபத்து சமயத்தில் முருகசாமி என்னுடைய வாகனத்தை ஓட்டியதாலும், அதன் காப்பீடு கழகம் என்ற வகையில் 5ம் எதிர்மனுதாரரை தரப்பினராக சேர்த்திருக்கிறேன் என்றால் சரிதான்.

G ANURADHA Digitally signed by G ANURADHA
Date: 2024.02.28 17:21:24 +0530